**09/ OL/ INS/ PR/01**

எனது எண்: 9/3/1/OL/2026/01
பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டு கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்லை.
2026 செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2026**

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரல்**

குறித்த பரீட்சையை 2026.12.08 ஆம் திகதி தொடக்கம் 2026.12.17 வரை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டினை விரைவாக நடாத்தி பெறுபேற்றினை வழங்குவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இத்தேசியப் பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக தங்கள் பாடசாலையில் இருந்து விடைத்தாள் மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்களை சரியாக பூரணப்படுத்தி குறித்த காலப்பகுதிக்குள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கிறோம்.

இதற்காக பின்வரும் அறிவுறுத்தல்களை தங்களது விசேட கவனத்திற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை முறையில் மாத்திரம் கோரப்படும். 2026.09.10 ஆம் திகதி தொடக்கம் 2026.09.23 ஆம் திகதி வரை **www.doenets.lk** எனும் இணையத்தளத்திலும் அல்லது **www. onlineexams.gov.lk** என்ற இணைய முகவரி மூலமும் விண்ணப்பப்படிவங்களை அனுப்பலாம். **விண்ணப்பங்கள் நிகழ்நிலை ஊடாக மாத்திரமே அனுப்பட வேண்டும்** என்பதனை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கவும்.
   **(விண்ணப்ப முடிவு 2026.09.23 ஆம் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்படிவங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)**

2. நிகழ்நிலை முறையில் பூர்த்தி செய்யப்பட்ட 10/11 ஆம் தரத்திற்கான நேர அட்டவணை சரியானதென தங்களாலோ அல்லது தங்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதி அதிபராலோ உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3. விண்ணப்பப்படிவத்தின் சகல பிரிவுகளுக்குமுரிய சரியான தகவல்களை வழங்குமாறு ஆசிரியர்களுக்கு விசேடமாக அறிவுறுத்தல்களை வழங்கவும்.

4. அவ்வாறு விண்ணப்பதாரி சரியான தகவலை உள்நுழைத்து பூரணப்படுத்தி தங்களுக்கு வழங்கும் விண்ணப்பப்படிவங்களை மாத்திரம் நீங்கள் மதிப்பீட்டிற்குப் பரிந்துரை செய்ய வேண்டும்.

❖ **மிக முக்கியமானது**

5. விண்ணப்பப்படிவத்தில் நிகழ்நிலை (Online) அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய பகுதிகள் சரியாக பூரணப்படுத்தப்பட்டு, அப் பரிந்துரைகளை நிகழ்நிலை (Online) முறையில் விண்ணப்பப்படிவங்களை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது உங்களது கடமையாகும். இதற்காக **www.onlineexams.gov.lk** இணைப்பின் (link) ஊடாக பரீட்சைத் திணைக் களத்தினால் தங்களுக்கு இதற்கு முன்னர் வழங்கப்பட்ட பயநர்பெயர் (User Name), கடவுச்சொல் (Password) என்பவற்றைப் பயன்படுத்தி முறைமைக்குள் பிரவேசிக்க வேண்டும். பிரவேசித்த பின்னர் அங்கு காட்டப்பட்டுள்ள **" G.C.E (O/L) Examinations – 2026 - Marking examiners verification"** என்பதைத் தெரிவு செய்க. இங்கு மதிப்பீட்டிற்காக விண்ணப்பித்துள்ள தங்களுடைய பாடசாலைப் பரீட்சகர்களின் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும் அதே வேளை Edit பொத்தானைப் (Button) பயன்படுத்தி தேவையான மாற்றங்களை மேற்கொண்டு, Submit பொத்தான் மூலம் செய்த

மாற்றங்களை முறைமையினுள் உள்நுழைக்கவேண்டும். (ஒவ்வொரு பரீட்சகரையும் வெவ்வேறாகப் பரிந்துரை செய்வது அத்தியாவசியமாகும்.) அவ்வாறே தங்களது பரிந்துரையை வழங்கிய பின்பு Principale's Certificate பொத்தானைப் பயன்படுத்தி சாராம்ச அறிக்கையை பதிவிறக்கம் (Download) செய்து கொள்ள வேண்டும்.

6. பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட சாராம்ச அறிக்கையில் **(SummaryPDF)** உள்ளடக்கப்பட்டுள்ள சகல விண்ணப்பதாரிகளினதும் தகவல்கள் சரியானவையா என்பதனைப் பரீட்சித்த பின்னர் (இதனை சரியாகப் பரீட்சிக்காமையினால் ஆசிரியர்களுக்கு மதிப்பீட்டிற்கான வாய்ப்பு இழக்கப்படலாம்) அவ்வாறு உறுதிப்படுத்திய அவசியமான சந்தர்ப்பத்தில் முன்வைப்பதற்காக பாடசாலையில் கோவைப்படுத்தி வைக்கப்படவேண்டும். **புதிய விண்ணப்பதாரிகளினது மாத்திரம் விண்ணப்பப்படிவங்களின் வன்பிரதிகள் (Hard Copies) உரிய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் கூடிய பிரதிகளை (நியமனக் கடிதம், கல்விச் சான்றிதழ்) இணைத்து 2026.09.23 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.**

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பாடசாலை பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**த. பெ. 1503,**
**கொழும்பு.**

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**விடைத்தாள் பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள், க.பொ.த (சா/தர)ப் பரீட்சை – 2026**" எனக் குறிப்பிடுக.)

**மேலதிக விசாரணைகளுக்கு:**

| | | | | |
|---|---|---|---|---|
| 011 2784037 | - | திரு. P.R தேவபந்து | - பரீட்சை ஆணையாளர் | - பா.ப. மதிப்பீடு |
| 011 2785633 | - | திருமதி. C. கிருஷ்ணகோபி | - பிரதிப் பரீட்சை ஆணையாளர் | - பா.ப. மதிப்பீடு |
| 011 2785216 | - | திருமதி. H.T.C.D.P. சிறிவர்தன | - பிரதிப் பரீட்சை ஆணையாளர் | - பா.ப. மதிப்பீடு |
| 011 2785644 | - | திரு. G.P.H.A.A. ஜயதிலக | - பிரதிப் பரீட்சை ஆணையாளர் | - பா.ப. மதிப்பீடு |
| 011 2785662 | - | திரு. M.W.S.C. வீரசிங்க | - உதவிப் பரீட்சை ஆணையாளர் | - பா.ப. மதிப்பீடு |

011 2785231
011 2785681 } - பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை

தொழில்நுட்ப உதவிகளுக்கு
நிகழ்நிலை அலகு - 0113 661122

**P.R தேவபந்து**
பரீட்சை ஆணையாளர்
பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீடு

ஒப்பம்: **A.K.S. இந்திகா குமாரி லியனகே**
பரீட்சை ஆணையாளர் நாயகம்